TAMIL NADU

News

TAMIL

MUMBAI TAMIL TIMES

NOVEMBER 2001

மும்பை

தமிழ் டைம்ஸ்

M U M B A I   T A M I L   T I M E S

வியாழக்கிழமை 29 நவம்பர் 2001

# ஜுஹு பீச்சில் பாட்டுப்பாடி பிச்சை எடுக்கும் கோல்கத்தா தலைமையாசிரியை

மும்பை, நவ. 29-

கோல்கத்தாவை சேர்ந்த பள்ளி தலைமையாசிரியை ஜுஹு பீச்சில் பாட்டுப்பாடி பிச்சை எடுத்து வருகிறார்.

கோல்கத்தா அருகிலுள்ள சத்னா என்ற இடத்திலிருக்கும் ராமகிருஷ்ணா மிஷன் பள்ளியின் தலைமை ஆசிரியையாக பணியாற்றி வந்தவர் மிருதுளா போஸ் (44).

வசதியான குடும்பத்தைச் சேர்ந்த மிருதுளாவுக்கு, சமையலறையில் ஏற்பட்ட தீவிபத்தில் முகம் மற்றும் உடலின் மேல் பகுதியில் தீக்காயங்கள் ஏற்பட்டன. அவரது சிகிச்சைக்கு ஏராளமான பணம் செலவழித்தார் மிருதுளாவின் மூத்த சகோதரர்.

ஆனால் தீ விபத்தினால் ஏற்பட்ட பாதிப்பில் இருந்து மிருதுளா விடுபடாததால் மனமாற்றத்துக்காக அவரை மும்பை மற்றும் கோவாவுக்கு அனுப்பி வைத்தார் அவரது சகோதரர்.

கடந்த ஜுலை மாதம் மும்பை வந்த மிருதுளா, முதல் நாளன்றே ஜுஹு பீச்சில் பணம் அனைத்தையும் ரவுடிகளிடம் பறிகொடுத்தார். உடுத்த மாற்று துணியின்றி கையில் பணம் இல்லாமல் பரிதவித்த அவர் பாட்டுப்பாடி பீச்சுக்கு வருபவர்களிடம் பிச்சை எடுக்க துவங்கினார்.

நாளடைவில் பீச்சில் பிச்சை எடுப்பதே அவரது தொழிலாகி விட்டது. இந்நிலையில் பீச்சில் உள்ள மற்ற பிச்சைக்காரர்களின் துன்புறுத்தல் பற்றி புகார் செய்ய கடந்த 19ம் தேதி சாந்தா குரூஸ் போலீஸ் நிலையத்துக்கு மிருதுளா சென்றபோது அவரது பரிதாப கதை தெரியவந்தது.

சரளமான ஆங்கிலத்தில் பேசியும், வங்காள மொழியில் இனிமையாக பாடிய மிருதுளாவை போலீசார் முதலில் சாந்தாகுரூசில் உள்ள 'கிரேசியஸ் ஹோம்'மில் சேர்த்தனர்.

பின்னர் நன்கொடை திரட்டி ரயிலுக்கு டிக்கெட் எடுத்துக் கொடுத்து மிருதுளாவை சொந்த ஊருக்கு அனுப்பி வைத்தனர். ஆனால், ஏற்கனவே தனக்கு ஏராளமாக செலவு செய்த குடும்பத்தினருக்கு மேலும் பாரமாக இருக்க விரும்பவில்லை என்று கூறி மிருதுளா மீண்டும் மும்பை திரும்பி விட்டார்.

**TAMIL NADU**

**News**

**TAMIL**

**DINAKARAN**

**JULY 2008**


# தினகரன்

Dinakaran

ஜூலை 27, 2018

दिनकरन


## 2 இந்தியர் உள்பட 6 பேருக்கு ரமோன் மகசேசே விருது

மணிலா, ஜூலை 27: பரத் வத்வானி, சோனம் வாங்குக் ஆகிய 2 இந்தியர்கள் உள்பட 6 பேருக்கு ரமோன் மகசேசே விருது அறிவிக்கப்பட்டுள்ளது.



▶ பரத்வானி, சோனம் வாங்குக்

ஆசியாவின் நோபல் பரிசு என அழைக்கப்படும் ரமோன் மகசேசே விருது பிலிப்பைன்சின் ரமோன் மகசேசே அறக்கட்டளை சார்பில் ஒவ்வொரு ஆண்டும் வழங்கப்படுகிறது. இந்த ஆண்டுக்கான விருது, இந்தியாவைச்சேர்ந்த பரத் வானி, சோனம் வாங்குக் ஆகிய 2 பேருக்கு வழங்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கான விழா அடுத்த மாதம் 31ம் தேதி பிலிப்பைன்ஸ் தலைநகர் மணிலாவில் உள்ள கலாச்சார மையத்தில் நடைபெறும். இது தொடர்பாக ரமோன் மகசேசே விருது அறக்கட்டளை வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

விருதுக்கு தேர்வு செய்யப்பட்டுள்ள இந்தியாவை சேர்ந்த வாங்குக் (51) வட இந்தியாவில் பின்தங்கிய கிராமப்புற பகுதிகளில் கல்வியில் சீர்திருத்தத்தை புகுத்தியவர். லடாக் பகுதியில் உள்ள இளைஞர்களுக்கு எதிர்காலத்தை உருவாக்கி தந்துள்ளார். சிறுபான்மையினத்தவரை உயர்த்திய இவரது சேவையை பாராட்டி இந்த விருது வழங்கப்படுகிறது.

மற்றொரு இந்தியரான வத்வானி, மனநோயால் பாதிக்கப்பட்டு சாலைகளில் திரிபவர்களை அழைத்து வந்து அவர்களுக்கு மருத்துவம் பார்த்து வருகிறார். பல்வேறு இடையூறுகளுக்கு இடையிலும் அவர் துணிவுடன் இப்பணியை செய்து வருவதை பாராட்டி மகசேசே விருது வழங்கப்படுகிறது. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.